'பாரின் எக்ஸ்சேஞ்ச்' மத்திய சர்க்காரில் கேட்டோம். அவர்கள் குறைவாகத்தான் கொடுத்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், 1963-ல் அதிகப்படியாக வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

SRI J. MATHA GOWDER : உருளைக்கிழங்கு பயிருக்கு 'லேட் ப்ளைட்' என்ற வியாதி வருவதால், விவசாயிகள் விதைகளை தாங்களே எடுத்து வைக்கமுடியவில்லை. இரண்டு போகம் கிழங்கு சாகுபடி செய்த போதிலும், விதை எடுத்து வைத்தால் அதில் பூச்சி இருக்குமோ என்ற பயத்தினால், விவசாயிகள் விதைகளை எடுத்து வைக்க முடிவதில்லை. தொடர்ந்து இன்னும் ஒரு ஆண்டிக்கு விதைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லையென்றால், நீலகிரியில் உருளைக்கிழங்கு விவசாயமே அடியோடு கெட்டுவிடும். ஆகவே, மத்திய சர்க்காரில் கேட்டு 'பாரின் எக்ஸ்சேஞ்ச்' அதிகமாக வாங்கி அதிகமாக விதைகளை வழங்க சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்கிறபடி அரசாங்கம் அக்கறை காட்டிக்கொண்டுதான் வருகிறது. இந்தியன் பொடாடோ ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் அதிகாரிகளையும், மற்ற இலாகா அதிகாரிகளையும் வைத்து அதிகப்படியான விதைகளை விவசாயிகளுக்குக் கொடுக்க வழிவகை செய்யப்படுகிறது. நீலகிரியில் மட்டுமின்றி, சிம்லாவிலும், இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

Government Forests (Fire accidents)

* 32 Q.—**SRI J. MATHA GOWDER :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நீலகிரியில், கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள அரசாங்கக் காடுகளில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதால் கிராம மக்கள் பயப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The Government are aware of the incidence of forest fires near villages, usually caused by local incendiarism. These fires are not allowed to spread and affect any village holdings. The Government are not aware that the villagers are afraid about these fires. They have not received any represenation.

* 33 Q.—**SRI J. MATHA GOWDER :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் பார்சன்ஸ் பள்ளத்தாக்கு காட்டில் தீ அணைக்கச் சென்று மூன்று காட்டிலாகா சிப்பந்திகள் மரணமடைந்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) இந்த விபத்து எப்படி ஏற்பட்டது ?

(உ) மரணம் அடைந்த சிப்பந்திகளின் குடும்பங்களுக்கு என்ன உதவி அளிக்கப்பட்டது ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (அ) Yes, Sir.

(இ) Two boys aged about 9 and 7 while at play in the area adjacent to the Electricity Board labour lines at the Parson's Valley, found a match box on the ground with a single broken match-stick. The younger boy struck the match-stick and as the fire burnt his fingers he dropped the lighted match which kindled the grass-fire. Fire spread rapidly due to fierce wind. While about 40 people were fighting the fire, the fire rose up the valley head, surrounded Forest Guard Vasudevan, Plantation Watcher, Dhananjayan and Maistry Ramaswamy who were on steep slopes. They could not run fast as smoke encircled them and the fire burnt their clothes and charred their bodies and they died on the spot.

( ) The question is under consideration.

SRI J. MATHA GOWDER : ஸார், முதல் கேள்வியில் கிராமங்களுக்குப் பக்கத்தில் காடுகள் வளர்ப்பதினால், தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொன்னேன், அப்படி வருவதைத் தடுக்க வேண்டும் என்றும் கேட்டேன். அதற்கு அமைச்சர் ரெப்ரசெண்டேஷன் வரவில்லை என்று சொன்னார்கள். இரண்டாவது கேள்வியில் பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் தீ விபத்தினால் மரணம் அடைந்தது சர்க்காருக்குத் தெரியுமா என்று கேட்டேன். சர்க்காரை நான் கேட்டுக்கொள்வது என்னவெனில், கிராமங்களுக்குப் பக்கத்தில் 50, 100 கஜ தூரத்தில் பாரஸ்ட்கள் வளர்க்கும் காரணத்தினால், தீ ஏற்படும் என்ற பீதி ஏற்படுகிறது. தயவுசெய்து கிராமங்களிலிருந்து அரை மைல், ஒரு மைல் தூரத்தில் காடுகளை வளர்க்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு இடுவார்களா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : அதுபோல தீ விபத்துக்கள் சாதாரணமாக ஏற்படுவதில்லை. பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் கிராம மக்கள் ஒத்துழைப்போடுதான் நல்ல முயற்சிகளெல்லாம் செய்கிறார்கள்.

SRI M. KALYANASUNDARAM : வன இலாகாவின் மூன்று அதிகாரிகள் மரணமடைந்தார்கள் என்று சொல்லப்பட்டது. அது எப்பொழுது நடந்தது, அவர்கள் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு கொடுக்கும் பிரச்சினை எப்பொழுது முடிவு செய்யப்படும் ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : தீ விபத்து ஏற்பட்டது 1962-ம் வருஷம் மார்ச் மாதம் 13-ம் தேதி 11-30 மணிக்கு. கொடுக்கக் கூடிய காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்று சீப் கன்சர்வேடர் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது சர்க்காரிலே இருக்கிறது. எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும்.

5th May 1962]

DR. B. NATARAJAN : இம்மாதிரியான தீக்கள் கிராமங்களில் வராமல் இருப்பதற்கு என்னென்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன ? அரசாங்கத்தாரால் என்னென்ன முயற்சிகள் செய்யப்படுகின்றன ? அதாவது மக்களுக்கு விளம்பரங்கள் மூலமாக பயிற்சி கொடுத்தால் இம்மாதிரியான விபத்துக்களை தடுக்கலாம். மேநாடுகளில் இம்மாதிரியாக விளம்பரங்கள் மூலமாக மக்களுக்கு பயிற்சி அளித்து வருகிறார்கள். காடுகளில் ரயில்கள் போகும்போது இப்படிப்பட்ட விளம்பரங்களை வைத்திருக்கிறார்கள். அம்மாதிரி விளம்பரங்களை இங்கும் வைத்து மக்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்கு ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : ஸார், இது பற்றி கிராமங்களில் தெரியாமல் இல்லை. நல்ல முறையில் உரங்கள் வேண்டும் என்ற காரணத்தால் அம்மாதிரி தீ வைத்து விட்டு அதிலிருந்து உரம் தயாரிக்கிறார்கள். அப்படிச் செய்யக் கூடாது என்று காட்டிலாகா அதிகாரிகள் அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்து வருகிறார்கள். இதைப் பற்றி ஒவ்வொரு வருஷமும் கிராமத்தார்களுக்கு சொல்லிக் கொண்டுதான் வரப்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் அதற்கு வேண்டிய முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டுதான் வருகிறது.

SRI J. MATHA GOWDER : ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் மீட்டிங்கில் சொல்லப்படுகிறது எல்லாவற்றையும் மற்ற எல்லா இலாக்காக்களும் எடுத்துக்கொண்டு அதன்படி நடக்கிறார்கள். ஆனால் காட்டிலாகாவில் மட்டில் அப்படி எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவே இல்லை. இப்படி கிராமங்களுக்கு பக்கத்தில் காடுகள் இருப்பதால் இப்படி ஆபத்துக்கள் ஏற்படுகின்றன என்று கலெக்டரிடம் சொன்னாலும் அதைப்பற்றி காட்டிலாகா நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே ஆலோசனைகளைச் சொன்னால் அதை கலெக்டரிடம் சொல்லி அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியாக சிபாரிசு செய்வார்களா ? ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் சொல்லக்கூடிய யோசனைகளை எடுத்துக்கொண்டு அதன்படி நடக்கும்படியாக ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : இதற்குத் தனியாக கேள்வி போட வேண்டும்.

SRI T. KARCHA GOWDER : காட்டிலாகா உத்யோகஸ்தர்கள் இப்படி ஆபத்துக்களுக்கு உள்ளாகாமல் இருப்பதற்கு அவர்களுக்கு ஆண்டுதோறும் பையர் ப்ரூப் உடைகளை வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : இம்மாதிரியான உடைகள் இருந்தால் அதை வாங்கிக் கொடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை சர்க்காருக்கு.

[5th May 1962

SRI A. P. DHARMALINGAM : இப்படி தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வளவு நஷ்ட ஈடு கொடுப்பதாக சர்க்காருக்கு உத்தேசம்?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

Housing Scheme (Low-Income Group)

*** 34 Q.—SRI M. S. MANI :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குறைந்த வருவாய் உள்ளவருக்கு வீடுகட்டித் தரும் திட்டத்தின்கீழ், குறைந்த வருவாய் உள்ளோர் எனச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் பட்டியல் சபையின்முன் வைக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government are not maintaining any list showing the persons who come under the Low Income Group Housing Scheme. Hence it is not possible to place such a list on the Table of the House.

However, for the information of the hon. Member, I may say, that lower middle class people, whose annual income does not exceed Rs. 6,000, are eligible for assistance under the Low Income Group Housing Scheme of the Government of India.

SRI M. S. MANI : எவ்வளவு ரூபாய்க்கு வருமானம் வருகிறவர்களை குறைந்த வருமானமுள்ளவர்கள் என்றும் எவ்வளவு ரூபாய்க்கு அதிகமாக வருமானம் வருகிறவர்களை அதிக வருமானம் உள்ளவர்கள் என்றும் கருதப்படுகிறார்கள். அதில் பீடி சுருட்டு போன்ற சில்லரைத் தொழில்களிலிருந்து கூலி பெறுகிற தொழிலாளர்களையும் சேர்த்துக்கொள்ளுகிறார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : வருஷம் ஒன்றுக்கு 6,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் வரக்கூடியவர்களை எல்லாம் குறைவான வருமானம் வரக்கூடியவர்கள் என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

SRI V. KRISHNAMOORTHY : வருமானத்தின் அடிப்படையில் இந்த திட்டத்தை பயன்படுத்தப்படும் என்று கனம் அமைச்சர் சொன்னார். ஏற்கெனவே வீடு கட்டிக்கொண்டிருக்கிறவர்கள் இந்த திட்டத்தினால் பயன் அடையாமல் இருந்தால் அவர்களுக்கு இந்தத் திட்டம் நீடிக்கப்படுமா? அவர்கள் பயன் அடையாமல் இருப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு வேண்டிய விதிகள் ஏற்கெனவே இருக்கின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் யாராவது வீடுகள் வேண்டுமென்று மனுச் செய்துகொண்டால் அந்த மனுவில் அவருக்கு வேறு வீடு இருக்கிறது என்று கண்டிருந்தால் அவருக்கு இது அனுமதிக்கப்பட மாட்டாது.